இன்றைக்குச் சிறப்புப் பெற்றிருக்கின்ற நமது அரசு இந்தப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும்.

அதேபோல, செத்து செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கக்கூடிய நமது மக்கள் நலப் பணியாளர்கள், ஒவ்வோர் ஆட்சியிலும் மாறி, மாறிப் பழி வாங்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பணிப் பாதுகாப்பை நமது அரசு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு நாளை தனது பதிலுரையை வழங்குவார்கள்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (3-4-2007) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை, 3-4-2007 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

2007 ஏப்ரல் 2] [பேரவைத் தலைவர்]

நாளை (3–4–2007) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3–4–2007) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

36. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

37. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

39. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)